**அயகம பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அயகம பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 828,667 ஆக இனங்காணப்பட்டிருந்த போது ரூபா 500,000 தொகையான பாதீடு செய்யப்பட்ட வருமானம் நீதிமன்றத் தண்டப்பண வருமானமாக காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டில் அந்த வருமானம் ரூபா 328,667 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அந்தப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,085,250 ஆக இனங்காணப்பட்டிருக்கும் போது, நீதிமன்றத் தண்டப்பணம் பேரேட்டுக் கணக்கில் அது ரூபா 1,645,418 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் பெறவேண்டிய வருமானம் ரூபா 560,168 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 59,800 தொகையான சொத்துக்கள், நிலையான சொத்துக் கணக்கிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் படி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 879,758 தொகை பேரேட்டுக் கணக்கில் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அது சரி செய்யப்படாமல் பொறுப்பொன்றாக பேரேட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 27,868 சிறு கொங்கிரீட் கற்கள் ரூபா 947,512 தொகைக்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அந்த வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக காண்பிக்கப்படாதிருந்ததுடன் அதன் உற்பத்திச்

செலவினமான ரூபா 560,105 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், கிடைக்கவேண்டிய வருமானம் ரூபா 947,512 தொகையும் பேரேட்டுக் கணக்கின் மூலம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின்படி ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்ட ரூபா 83,897 கூட்டுப்பெறுமதியான பொருட்கள், சிபாரிசினை அமுல்படுத்துவதற்கு முன்னர் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் நிலையான சொத்துக் கணக்கிலும் சீராக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது ரூபா 15,174 தொகையான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத 70 பொருள் அலகுகள் அழிவடைந்திருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின் ஊடாக அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,919,372 ஆக இருந்ததுடன் பயன்பாட்டுப் பதிவேடுகளின் படி அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,811,780 ஆனமையால் ரூபா 7,109,182 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

2010 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதம அமைச்சுச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது உடன்படிக்கையின் அடிப்படையில் மூன்று ஊழியர் சேர்க்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 86,250 சம்பளம் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,443,029 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 298,489 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டில் செயற்பாட்டுப் பற்றாக்குறையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 718 சதவீத வீழ்ச்சியினைக் காண்பித்தது. வருமான அதிகரிப்பு வேகத்தை விட அதிகரித்த வேகத்தில் செலவினங்கள் அதிகரித்தமையும், அனுமதிப்பத்திரக் கட்டணம், தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணங்களும் மற்றும் ஏனைய வருமானங்களில் ஏற்பட்ட குறைவுகளும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 355 | 477 | 110 |
| வாடகை | 1,627 | 2,223 | 17 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 472 | 369 | 42 |
| ஏனைய வருமானம் | 11,829 | 10,447 | 2,503 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரித்த வருமானத்தை ஒப்பீடுசெய்த போது அனுமதிப்பத்திரக் கட்டண மதிப்பிடப்பட்ட வருமானத்தைவிட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 28 சதவீத குறைவைக் காட்டியது.

### 2.3.3 ஏனைய வருமானம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் 370 நுகர்வோர்கள் வசதிகளைப் பெறுகின்ற 11 நீர் செயற்திட்டங்கள் தற்போது அமுல்படுத்தப்படுவதுடன் 2013 நவம்பர் 28 ஆந் திகதி வரையில் அவற்றின் பராமரிப்புச் செலவினம் ரூபா 423,909 ஆக இருந்தது. அத்திகதி வரை பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 180,332 ஆனமையால் பராமரிப்புச் செலவினத்தையாவது தீர்த்துக் கொள்வதற்கு போதியளவான பணமொன்று நீர் நுகர்வோர்களிடமிருந்து அறவிடுவதற்கு முடியாமையினால் சபையினால் மீளாய்வாண்டின் நவம்பர் மாதம் வரையிலும் ரூபா 243,577 தொகையான மேலதிகக் கிரயமொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டில் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் மூலம் நீர் வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்காக நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 40,992 தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஏப்ரல் முதல் செப்தெம்பர் வரை இனங்காணப்பட்ட ரூபா 1,398,690 தொகையான முத்திரைக் கட்டண வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அந்த ஆண்டின் ஒக்தோபர் மாதம் முதல் முத்திரைக்கட்டண வருமானத்தை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆகஸ்ட் மாதம் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை இனங்காணப்பட்ட ரூபா 1,085,250 தொகையான நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹியூம் குழாய் இருப்புப் பதிவேட்டின் படி 2'x8 அளவில் 09 ஹியூப் குழாய்களும் 2'x4 அளவில் 14 ஹியூம் குழாய்களும் பதியப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 02 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது ரூபா 22,998 பெறுமதியான 2'x8 அளவிலான 02 ஹியூப் குழாய்கள் பற்றாக்குறையாக இருந்தன.

(ஆ) சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற பொதுக் களஞ்சிய இருப்புக்கள், பொதுக் களஞ்சிய கணக்கொன்றின் மூலம் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பழுதுபார்க்கக்கூடிய டபள் கெப் வாகனம், சிங்கிள் கெப் வாகனம், வீதிச் செப்பனிடுகை, ஸ்வராஜ் உழவு இயந்திரம் மற்றும் கொங்கிரீட் கலவை (சிறிய) என்பன பழுதுபார்க்கப்படாமையின் காரணமாக ஒரு வருட காலமாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் சீன அரசாங்கத்தின் உதவியின் கீழ் கிடைத்த கொங்கிரீட் கலவை இயந்திரமொன்று இடர் முகாமைத்துவ அமைச்சினால் 2012 பெப்ரவரி 07 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அந்த இயந்திரம் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 28 ஆந் திகதி வரையிலும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் சிறு கொங்கிரீட் கற்கள் உற்பத்தி செயற்திட்டத்தின் வருமானமும் செலவினமும் உரிய பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 25 செலவினத் தலைப்புக்களுக்குரிய ரூபா 38,913,736 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் 09 செலவினத் தலைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 338,500 தொகையான நிதி ஏற்பாட்டில் எவ்வித செலவினமும் செய்யாது சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்